செ.வெ.எண்.225/2009(செமதொஅ) நாள் : 29.07.2009.

**<u>ஆதம்பாக்கம் ஏரிக்குள் ரூ.72 கோடி மதிப்பிலான நிலம் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்பு – மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்களின் முயற்சிக்கு கிடைத்த வெற்றி.</u>**

காஞ்சிபுரம் மாவட்டம் ஏரிகள் நிறைந்த மாவட்டம் ஆகும். அண்மையில் ஏரிகளை ஆக்கிரமிப்பாளர்கள் கூறு போட்டு விற்க முயற்சி செய்ததை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கண்டுபிடித்து, அவற்றை தடுத்து நிறுத்தி ஆக்கிரமிப்பாளர்களை அகற்றி ஏரிகளை பாதுகாத்து வருகிறார். அதன் தொடர்ச்சியாக சென்னை ஆதம்பாக்கம் ஏரி 13.26 ஹெக்டேர் பரப்பு கொண்டுள்ளது. அதில் 10.26 ஹெக்டேர் பரப்புள்ள பகுதியினை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளனர். அதனால் மழைக் காலங்களில் அதன் சுற்றுப் பகுதியிலிருந்து வெள்ளம் ஏரிப் பகுதிக்கு வரமுடியாமல் ஆங்காங்கே உள்ள வீடுகளைச் சுற்றி தேங்கி விடுகிறது. இதனால் அந்த பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் குடியிருப்போர் நல சங்கத்தினர் கடும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். அண்மையில் அந்த பகுதியைச் சார்ந்த குடியிருப்போர் நல சங்கத்தினர் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களிடம் ஏரிக்குள் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என கோரிக்கை மனு அளித்தார்கள். அந்த மனுவின் மீது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்புகளை அகற்ற வருவாய்துறை மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு உத்திரவிட்டார்.

அரசுத்துறை அலுவலர்கள் உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுத்து இதுவரை 6 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியிருந்ததை இயந்திரங்களைக் கொண்டு அகற்றி மீட்டுள்ளனர். இவற்றின் மதிப்பு ரூ.72 கோடியாகும். 25க்கும் மேற்பட்ட குடிசைகள் மற்றும் வீடுகள் அகற்றப்பட்டுள்ளன. இந்த மீட்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) திரு.அ.நம்பிராசன், செங்கல்பட்டு வருவாய் கோட்ட அலுவலர் செல்வி. பத்மஜா தேவி ஆகியோரின் மேற்பார்வையில் தாம்பரம் வட்டாட்சியர் செய்து வருகிறார்.

இந்த மீட்பு பணிகளை பார்வையிட்ட மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில், ஆதம்பாக்கம் ஏரியின் ஆக்கிரமிப்புகள் முற்றிலும் அகற்றப்படும். பின்னர் ஏரியினை தூர் வாரி ஆழப்படுத்தி, கரைகள் பலப்படுத்தப்படும். இந்த ஏரியின் கரைகளில் பொதுமக்கள் நடை பயிற்சி செல்ல வசதி செய்து அழகுபடுத்தப்படும். மீண்டும் ஆக்கிரமிப்பாளர்கள் உள்ளே நுழைந்து விடாதபடி ஏரி பாதுகாக்கப்படும்.” என்று தெரிவித்தார்.

செய்தி வெளியிடுபவர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.